ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1837/13 - 2013 නොවැම්බර් මස 20 වැනි බදාදා - 2013.11.20

*1837/13 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

*அறிவித்தல்*

*இரட்டை வரி விதிப்பைத் தவிர்ப்பதற்காகவும், வருமான வரிகளை செலுத்தாது தட்டிக் கழிப்பதனை தடுக்கும் வகையிலும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பெலாருஸ் குடியரசிற்கும் இடையில் 2013.08.26 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட, இங்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இரு தரப்பு ஒப்பந்தத்திற்கு 2013.10.23 ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் படி பாராளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என்பதனை 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 97(1)(ஆ) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றது.*

*பீ. பி. ஜயசுந்தர,*
*செயலாளர்,*
*நிதி, திட்டமிடல் அமைச்சு.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2013, நவெம்பர் 19.*

**வருமானத்தின் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரிவிதிப்பனவை தவிர்ப்பதற்காகவும் வரி செலுத்தாது தட்டிக் கழிப்பதனைத் தடுப்பதற்குமாகவும் பெலாருஸ் குடியரசின் அரசாங்கத்திற்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம்**

*பெலாருஸ் குடியரசு அரசாங்கமும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கமும் வருமானத்தின் மீதான இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்காகவும் வரி செலுத்தாது தட்டிக் கழிப்பதைத் தடுப்பதற்காகவும் கீழே காட்டப்பட்டுள்ளவாறு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கு உடன்பட்டுள்ளன.*

*உறுப்புரை 1*

**உள்ளடக்கப்படும் ஆட்கள்**

*ஒப்பந்த அரசுகளில் ஒன்றில் அல்லது இரண்டிலும் வதியுநர்களாகவுள்ள ஆட்கள் மீது இந்த ஒப்பந்தம் ஏற்புடையதாகும்.*

*உறுப்புரை 2*

**உள்ளடக்கப்படும் வரிகள்**

*1. ஒப்பந்த அரசொன்றின் சார்பில் அல்லது அதன் உள்ளூர் அதிகார சபைகளின் சார்பில் வருமானங்கள் மீது விதிக்கப்படும் வரிகள் தொடர்பில், அவை அறவிடப்படும் முறைகளைக் கவனத்திற் கொள்ளாது இவ்வொப்பந்தம் ஏற்புடையதாகுதல் வேண்டும்.*

2. மொத்த வருமானத்தின் அல்லது அதன் பகுதிகள் மீது விதிக்கப்படும் அசையும் அல்லது அசையா ஆதனங்களைப் பராதீனப்படுத்துவதன் மூலம் கிடைக்கும் பெறுகைகள் மீதான வரிகள், தொழில் முயற்சிகளால் செலுத்தப்படும் வேதனங்கள் அல்லது சம்பளங்களின் மொத்தத்தொகையின் மீதான வரிகள் என்பன உள்ளிட்ட அனைத்து வரிகளும் வருமானத்தின் மீதான வரியாகக் கருதப்படும்.

3. இவ்வொப்பந்தமானது தற்போது நடைமுறையிலுள்ள பின்வரும் வரிகள் மீது குறிப்பாக ஏற்புடையதாகும்.

(அ) பெலாருஸ் குடியரசில், -
(i) வருமானத்தின் மீதான வரி,
(ii) இலாபத்தின் மீதான வரி, மற்றும்
(iii) தனிப்பட்டவர்கள் மீதான வருமான வரி
(இதனகத்துப் பிற்பாடு "பெலாருஸ் வரி" என அழைக்கப்படும்)

(ஆ) இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசில்,-
முதலீட்டுச் சபையுடன் உடன்பாடுகளைச் செய்துகொண்டுள்ள தொழில் முயற்சிகளின் புரள்வின் அடிப்படையிலான வரி உள்ளிட்ட வருமான வரி
(இதனகத்துப் பிற்பாடு, "இலங்கை வரி" என அழைக்கப்படும்)

4. இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதியின் பின்னர், ஏற்கனவே நடைமுறையிலுள்ள வரிகளுக்கு மேலதிகமாக அல்லது அவற்றுக்குப் பதிலாக விதிக்கப்படும் அவற்றையொத்த அல்லது பெருமளவில் அவற்றையொத்த வேறு ஏதேனும் வரிகளுக்கும் இவ்வொப்பந்தம் ஏற்புடையதாகுதல் வேண்டும். ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகள் தங்களது வரிச் சட்டங்களில் செய்யப்படும் முக்கிய மாற்றங்கள் தொடர்பில் பரஸ்பரம் அறிவித்துக் கொள்வது அவசியமாகும்.

*உறுப்புரை 3*

**பொது வரைவிலக்கணங்கள்**

1. சொல்லமைவின் படி வேறு விதமான கருத்து தேவைப்பட்டாலன்றி, இவ்வொப்பந்த நோக்கங்களுக்காக:

(அ) "ஒப்பந்த அரசு" மற்றும் "மற்றைய ஒப்பந்த அரசு" என்ற வாசகங்கள் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பெலாருஸ் அரசை அல்லது இலங்கையை குறிக்கும் ;

(ஆ) "பெலாருஸ்" என்ற வாசகம் பெலாருஸ் குடியரசைக் குறிக்கும். புவியியல் கண்ணோட்டத்தில் அது, பெலாருஸ் அரசின் சட்டங்களின் கீழ் சர்வதேச சட்டத்திற்கு இணங்க பெலாருஸ் குடியரசு இறைமை உரிமைகளையும் நியாயாதிக்கத்தையும் பிரயோகிக்கும் நிலப் பிரதேசத்தைக் குறிக்கும்;

(இ) "இலங்கை" – என்ற சொல் சர்வதேச சட்டத்திற்கும் அதன் தேசிய அரசியலமைப்புகளுக்கும் இணங்க, இலங்கை தனது இறைமை உரிமைகளையும் நீதிமன்ற நியாயாதிக்கத்தையும் அமுல்படுத்துகின்ற அதன் நிலப் பிரதேசம், உள்ளக நீர் நிலைகள், அரசுக்குச் சொந்தமான கடற் பிரதேசம், அவற்றுக்கு மேல் அமைந்துள்ள வான்வெளி என்பனவும் பிரத்தியேக பொருளாதார வலயம், கண்டமேடை என்பனவும் உள்ளிட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்குரிய ஆட்புலப் பிரதேசத்தைக் குறிக்கும்;

(ஈ) "ஆள்" என்ற சொல் எவரேனும் தனிப்பட்ட ஆளொருவரை, கம்பனியொன்றை மற்றும் ஆட்களின் சபையொன்றைக் குறிக்கும் ;

(உ) "கம்பனி" என்ற சொல் ;
(i) பெலாருஸ் அரசின் விடயத்தில், எந்தவொரு சட்டரீதியான ஆளையும் வரிநோக்கங்களுக்காக தனியான நிறுவனமாகக் கருதப்படும் எந்தவொரு நிறுவனத்தையும் குறிக்கும்.

(ii) இலங்கையின் விடயத்தில், வரி நோக்கங்களுக்காக ஒரு சபையாக, கம்பனியாக, அல்லது கருதப்படும் எந்தவொரு சபையையும் கம்பனியையும் அல்லது எந்தவொரு நிறுவனத்தையும் குறிக்கும்.

(ஊ) "ஒப்பந்த அரசு ஒன்றின் தொழில் முயற்சி" மற்றும் "மற்றைய ஒப்பந்த அரசின் தொழில் முயற்சி" என்ற வாசகங்கள் முறையே ஒப்பந்த அரசு ஒன்றின் வதியுநர் ஒருவரினால் கொண்டு நடாத்தப்படுகின்ற தொழில் முயற்சியையும் மற்றைய ஒப்பந்த அரசின் வதியுநர் ஒருவரினால் கொண்டு நடாத்தப்படுகின்ற தொழில் முயற்சியையும் குறிக்கும்;

(எ) "சர்வதேச போக்குவரத்து" என்ற வாசகம், ஒப்பந்த அரசு ஒன்றில் தனது தொழிற்பாட்டு முகாமை நிலையத்தைக் கொண்டுள்ள தொழில் முயற்சி ஒன்றினால் இயக்கப்படுகின்ற கப்பல் அல்லது வானூர்தி, அக்கப்பல் அல்லது அவ்வானூர்தி மற்றைய ஒப்பந்த அரசின் நிலையங்களுக்கு இடையில் மாத்திரம் நடாத்துகின்ற சந்தர்ப்பங்கள் தவிர்ந்த எந்தவொரு போக்குவரத்தையும் குறிக்கும் ;

(ஏ) "செயற்பாட்டு முகாமை நிலையம்" என்பது ஒரு உண்மையாகவே முகாமை செய்யப்படுகின்ற, கட்டுப்படுத்தப்படுகின்ற மற்றும்/ அல்லது கம்பனியின் முகாமைக்கு அத்தியாவசியமான கொள்கைத் தீர்மானங்கள் அதிஉயர் மட்டத்தில் எடுக்கப்படுகின்ற இடத்தைக் குறிக்கும்.

(ஐ) "நாட்டினத்தவர்" என்ற சொல் ;

(i) ஒப்பந்த அரசு ஒன்றில் நாட்டினத்துரிமை பெற்றுள்ள எந்தவொரு ஆளையும்,
(ii) ஒப்பந்த அரசு ஒன்றில் நடைமுறையிலுள்ள சட்டத்தின் ஊடாக குறித்த சட்ட அந்தஸ்தினை பெறுகின்ற எந்தவொரு சட்டரீதியான ஆளையும் அல்லது பங்குடமையையும் அல்லது சங்கத்தையும் குறிக்கும்.

(ஒ) "தகுதிவாய்ந்த அதிகாரி" என்ற வாசகம் ;

(i) பெலாருஸ் அரசின் விடயத்தில், பெலாருஸ் குடியரசின் வரிகள் மற்றும் தீர்வைகள் அமைச்சு அல்லது அதன் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியை,

(ii) இலங்கையின் விடயத்தில் "உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தை" அல்லது ஆணையாளர் நாயகத்தின் அதிகாரம் வழங்கப்பெற்ற பிரதிநிதியைக் குறிக்கும்.

(ஓ) "வரி " என்ற சொல் தேவைக்கு ஏற்ப பெலாருஸ் வரியை அல்லது இலங்கை வரியைக் குறிக்கும். எனினும் இந்த ஒப்பந்தம் ஏற்புடையதாகும் வரிகளுடன் தொடர்புடைய ஏதேனும் தட்டிக் கழிப்புக்கள் அல்லது கழிப்பனவுகள் தொடர்பில் செலுத்த வேண்டிய ஏதேனும் ஒரு தொகை அல்லது இவ்வரிகளுடன் தொடர்புடைய வகையில் விதிக்கப்பட்ட ஏதேனும் ஒரு தண்டத்தினைப் பிரதிநிதித்துவம் செய்யும் தொகை இதில் உள்ளடங்க மாட்டாது.

2. ஒப்பந்த அரசு ஒன்று ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் இந்த ஒப்பந்தத்தை ஏற்புடையதாக்குகையில், இதில் வரைவிலக்கணம் கூறப்படாத ஏதேனும் ஒரு சொல்லை, அதன் சொல்லமைவின் படி வேறு விதமாக பொருள் கொள்ள வேண்டிய அவசியம் இருந்தாலேயன்றி, இவ்வுடன்படிக்கையுடன் தொடர்புடைய வரி நோக்கங்களுக்காக அவ் அரசின் சட்டத்தின் கீழ் அச்சந்தர்ப்பத்தில் கொண்டுள்ள கருத்தையே கொள்ளுதல் வேண்டும். அத்துடன் அவ் அரசில் நடைமுறையிலுள்ள வரிச் சட்டங்களின் கீழ் அச்சொல் கொண்டுள்ள கருத்துக்கள், அவ் அரசின் ஏனைய சட்டங்களின் கீழ் அச்சொல் கொண்டுள்ள கருத்துக்களை விஞ்சி ஏற்புடையதாகுதல் வேண்டும்.

உறுப்புரை 4

**வதியுநர்**

1. இவ்வொப்பந்தத்தின் நோக்கங்களுக்காக "ஒப்பந்த அரசொன்றின் வதியுநர்" என்ற வாசகம் நிரந்தர வதிவு, வதிவிடம், கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட நிலையம், முகாமை நிலையம் அல்லது அத்தகைய தன்மையைக் கொண்ட வேறு ஏதேனும் அளவுகோள்களின் அடிப்படையில் அவ்வரசின் சட்டத்தின் கீழ் வரி விதிப்பனவுக்குள்ளாகும் எந்தவொரு ஆளையும் குறிக்கும். எவ்வாறாயினும், அந்த அரசின் மூலங்களிலிருந்து மாத்திரம் கிடைக்கும் வருமானம் தொடர்பில் அந்த அரசினுள் வரிவிதிப்புக்குள்ளாகும் எந்தவொரு ஆளையும் இவ்வாசகம் குறிக்கமாட்டாது.

2. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் அடிப்படையில், எவரேனும் ஆளொருவர் ஒப்பந்த அரசுகள் இரண்டிலும் வதியுநராக இருப்பாராயின், அவரின் நிலை தொடர்பில் கீழே உள்ளவாறு தீர்மானித்தல் வேண்டும்.

(அ) அவருக்கு நிரந்தர வதிவிடம் உள்ள அரசில் மாத்திரம் அவர் வதியுநராகக் கருதப்படுவார். மேலும் அவருக்கு இரு அரசுகளிலும் நிரந்தர வதிவிடம் காணப்படுமாயின், அவருக்கு மிகவும் நெருக்கமான தனிப்பட்ட மற்றும் பொருளாதாரத் தொடர்புகள் காணப்படுகின்ற (அவரது முக்கியமான அக்கறைகளின் மத்திய நிலையமாகவுள்ள) அரசில் மாத்திரம் அவர் வதியுநராகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) அவரது மிகவும் முக்கியமான அக்கறைகளின் மத்திய நிலையமாகவுள்ள அரசினைத் தீர்மானிக்க முடியாதவிடத்து, அல்லது ஒரு அரசிலேனும் அவருக்கு நிரந்தர வதிவிடம் எதுவும் காணப்படாதவிடத்து, அவர் வழமையாக வதியும் இடம் உள்ள அரசில் மாத்திரம் அவர் வதிபவராகக் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) அவருக்கு இரண்டு அரசுகளிலும் வழமையாக வதியும் இடங்கள் காணப்படுமிடத்து அல்லது ஒன்றிலேனும் அவ்வாறான ஒன்று காணப்படாதவிடத்து, அவர் நாட்டினத்தவராகவுள்ள அரசில் மாத்திரம் அவர் வதிபவராகக் கருதுதல் வேண்டும் ;

(ஈ) அவர் இரு அரசுகளிலும் நாட்டினத்தவராக இருப்பின் அல்லது அவற்றில் ஒன்றிலேனும் நாட்டினத்தவராக இல்லாதவிடத்து, இவ்விடயத்தை ஒப்பந்த அரசுகளின் தகவுடைய அதிகாரிகள் பரஸ்பர உடன்பாட்டின் மூலம் தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும்.

3. 1ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் காரணமாக தனியாளொருவர் அல்லாத ஆளொருவர் ஒப்பந்த அரசுகள் இரண்டிலும் வதிபவராக இருப்பின், செயற்பாட்டு முகாமை நிலையம் அமைந்துள்ள அரசில் மாத்திரமே வதிபவராகக் கருதுதல் வேண்டும். செயற்பாட்டு முகாமை நிலையம் அமைந்துள்ள அரசைத் தீர்மானிக்க முடியாதவிடத்து இவ் விடயத்தை ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகள் பரஸ்பர உடன்பாட்டின் மூலம் தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும்.

உறுப்புரை 5

**நிரந்தரத்தாபனம்**

1. இவ்வொப்பந்தத்தின் நோக்கங்களுக்காக "நிரந்தரத் தாபனம்" என்னும் வாசகம் தொழில் முயற்சியொன்றின் வியாபாரச் செயற்பாடுகள் முழுமையாக அல்லது பகுதியாகக் கொண்டு நடாத்தப்படும் நிலையான வியாபார நிலையத்தைக் குறிக்கும்.

2. "நிரந்தரத்தாபனம்" என்னும் சொல் குறிப்பாகப் பின்வருவனவற்றையும் உள்ளடக்கும் –

(அ) முகாமை நிலையம் ;

(ஆ) கிளை ;

(இ) அலுவலகம் ;

(ஈ) தொழிற்சாலை ;

(உ) வேலைத்தளம் ;

(ஊ) சுரங்கம், எண்ணெய் அல்லது வாயுக்கிணறு, கற்குழி அல்லது இயற்கை வளத்தை அகழும் வேறு ஏதேனும் நிலையம் ;

3. இதே போன்று "நிரந்தரத் தாபனம்" என்னும் சொல் பின்வருவனற்றையும் உள்ளடக்கும் –

(அ) (i) கட்டட வேலைத்தளம், நிர்மாணம், ஒன்று சேர்க்கும் அல்லது பொருத்தும் செயற்திட்டம் அல்லது அவற்றுடன் தொடர்புடைய மேற்பார்வைச் செயற்பாடுகள் ;

(ii) அகழ்வுச் செயற்திட்டம், இயற்கை வளங்களைக் கண்டுபிடித்தல் அல்லது அபிவிருத்தி செய்தலுக்காகப் பயன்படுத்தப்படும் கப்பல், அவற்றுடன் தொடர்புடைய மேற்பார்வைச் செயற்பாடுகள் அடங்கலாக,

எனினும் அவ்வேலைத்தளம் அல்லது செயற்திட்டம் அல்லது செயற்பாடுகள் குறித்த நிதியாண்டில் ஆரம்பிக்கும் அல்லது முடிவடையும் ஏதேனும் பன்னிரண்டு மாத காலப்பகுதியினுள் 183 நாட்களுக்கு மேற்பட்ட காலம் தொடருமாயின் மாத்திரம்.

(ஆ) ஒரு தொழில் முயற்சி, மேற்படி நோக்கங்களுக்காக ஊழியர்களை அல்லது வேறு ஆளணியினரைப் பயன்படுத்தி ஆலோசனைச் சேவைகள் அடங்கலாக சேவைகளை வழங்குதல். எனினும், அத்தகைய தன்மையைக் கொண்ட (அதே செயற்திட்டத்திற்கு அல்லது தொடர்புடைய செயற்திட்டமொன்றுக்கு) செயற்பாடுகள் நாட்டின் உள்ளே குறித்த நிதியாண்டில் ஆரம்பிக்கும் அல்லது முடிவடையும் ஏதேனும் பன்னிரண்டு மாத கால எல்லையினுள் மொத்தமாக 183 நாட்களுக்கு மேற்பட்ட காலப் பகுதியில் அல்லது காலப் பகுதிகளில் தொடருமாயின் மாத்திரம்.

4. இவ்வுறுப்புரையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பொருட்படுத்தாது "நிரந்தரத் தாபனம்" எனும் சொல் பின்வருவனவற்றை உள்ளடக்கமாட்டாது என்பதனைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

(அ) தொழில் முயற்சியொன்றுக்குரிய பொருட்களை அல்லது வணிகப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தும் அல்லது காட்சிப்படுத்தும் நோக்கத்திற்காக மட்டும் வசதிகளைப் பயன்படுத்தல் ;

(ஆ) களஞ்சியப்படுத்துதல், காட்சிப்படுத்துதல் அல்லது விற்பனையின்றி விநியோகிக்கும் நோக்கத்திற்காக மாத்திரம் தொழில் முயற்சி ஒன்றுக்குச் சொந்தமான பொருட்களின் அல்லது வணிகப் பொருட்களின் கையிருப்பு ஒன்றினைப் பேணுதல் ;

(இ) தயாரிப்பு நோக்கத்திற்காக மாத்திரம் தொழில் முயற்சியொன்றுக்குரிய பொருட்களின் அல்லது வணிகப் பொருட்களின் கையிருப்பு ஒன்று வேறு ஒரு தொழில் முயற்சியினால் பேணப்படுதல்.

(ஈ) தொழில் முயற்சிக்கான பொருட்களை அல்லது வணிகப் பொருட்களை அல்லது வியாபாரப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக அல்லது தகவல்களைச் சேகரிப்பதற்காக மாத்திரம் நிலையான வியாபார நிலையமொன்றை நடாத்துதல்.

(உ) தொழில் முயற்சி ஒன்றிற்காக பூர்வாங்கமான அல்லது துணைத் தன்மையினைக் கொண்ட வேறு ஏதேனும் செயற்பாட்டை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக மாத்திரம் நிலையான வியாபார நிலையம் ஒன்றை நடாத்துதல்.

(ஊ) (அ) முதல் (உ) வரையான உப பந்திகளில் கூறப்பட்டுள்ள ஏதேனும் நோக்கங்களின் தொகுதியொன்று மேற்கொள்வதற்காக மாத்திரம் நிரந்தர வியாபார நிலையமொன்றைக் கொண்டு நடாத்துமிடத்து அவை அந்நோக்கங்களுக்கான பூர்வாங்க அல்லது துணைத் தன்மையைப் பெறுதல்.

5. 7 ஆம் பந்தி ஏற்புடையதாகும் சுதந்திர நிலையிலுள்ள முகவரொருவரைத் தவிர எவரேனும் ஆளொருவர் ஒப்பந்த அரசு ஒன்றில் மற்றைய ஒப்பந்த அரசின் தொழில் முயற்சியொன்றுக்காகச் செயற்படுகின்ற சந்தர்ப்பத்தில்,

(அ) அவ் ஆளின் செயற்பாடுகள் 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளால் வரையறை செய்யப்பட்டதும், நிலையான வியாபார நிலையம் ஒன்றின் ஊடாக மேற்கொள்ளப்படுமிடத்து அந்த வியாபார நிலையம் அப்பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் நிரந்தர தாபனமாக ஆக்கப்படாததுமான செயற்பாடாக இருந்தால் அன்றி, தொழில் முயற்சியின் சார்பில் ஒப்பந்தங்களைச் செய்வதற்கு அதிகாரம் பெற்ற, அவ் ஒப்பந்த அரசில் அவ் அதிகாரத்தை ஒரு வழக்கமாக செயற்படுத்தக்கூடிய ஆளொருவர், அல்லது

(ஆ) அவ்வாறான அதிகாரம் இல்லாதவிடத்தும், முதலில் குறிப்பிட்ட அரசில் வழக்கமான முறையில் கொண்டு நடாத்துகின்ற பொருட்கள் அல்லது வணிகப்பொருள் கையிருப்பு ஒன்றின் மூலம் தொழில்முயற்சியின் சார்பில் பொருட்கள் அல்லது வணிகப் பொருட்களை விநியோகிக்கும் ஆளொருவர்,

ஆக இருப்பின் தொழில்முயற்சிக்காக மேற்கொள்ளும் ஏதேனும் செயற்பாடுகள் தொடர்பில் அத்தொழில் முயற்சிக்கு முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசில் நிரந்தரத் தாபனம் ஒன்று இருப்பதாக 1 ஆம் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளைக் கவனத்தில் எடுக்காது கருதுதல் வேண்டும்.

6. மறு காப்புறுதி தொடர்பில் அன்றி, ஒப்பந்த அரசு ஒன்றின் காப்புறுதித் தொழில் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் வியாபாரம் மேற்கொள்ளுமாயின் அல்லது 7 ஆம் பந்தி ஏற்புடையதாகும் சுதந்திர நிலையிலுள்ள பிரதிநிதி ஒருவரைத் தவிர வேறு ஆளொருவர் ஊடாக அந்நிலப் பிரதேசத்தினுள் காணப்படும் அபாயங்களுக்காகக் காப்புறுதி செய்வாராயின், இவ் உறுப்புரையின் முன்னைய ஏற்பாடுகளைக் கவனத்திற் கொள்ளாது அதற்கு மற்றைய ஒப்பந்த அரசில் நிரந்தர தாபனம் ஒன்று உள்ளது என்று கருதுதல் வேண்டும்.

7. மேற்குறித்த சாதாரண நடைமுறைகளுக்கு இணங்கச் செயற்படும் தரகர் ஒருவரின், சாதாரண தரகுப்பண முகவர் ஒருவரின் அல்லது சுயாதீன நிலையிலுள்ள வேறு எவரேனும் முகவர் ஒருவரின் ஊடாக ஏதேனும் ஒப்பந்த அரசொன்றின் தொழில் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசின் உள்ளே வியாபாரச் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற காரணத்தினால் மாத்திரம் அத்தொழில்முயற்சிக்கு மற்றைய ஒப்பந்த அரசில் நிரந்தரத் தாபனமொன்று இருப்பதாகக் கருதக்கூடாது. எவ்வாறாயினும், அத்தகைய முகவர் ஒருவரின் செயற்பாடுகள் அத்தொழில் முயற்சிக்காக முழுமையாக அல்லது பிரதானமாக அர்ப்பணித்திருப்பின் அத்துடன் வணிக மற்றும் நிதித் தொடர்புகளின்போது சுயாதீனமான தொழில்முயற்சிகளுக்கிடையில் செய்துகொள்ளப்பட்டிருக்க முடியுமான முறையை விட வேறுபட்ட விதத்தில் அத்தொழில்முயற்சிக்கும் முகவருக்கும் இடையில் நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டு அல்லது விதிக்கப்பட்டிருப்பின் இப்பந்தியின் கருத்தின்படி அவர் சுதந்திர நிலையிலுள்ள ஒரு முகவராகக் கருதப்படக் கூடாது.

8. ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் கம்பனியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் கம்பனியொன்றை நிர்வகித்தல் அல்லது அத்தகைய கம்பனியொன்றினால் நிர்வகிக்கப்படுதல் (நிரந்தர நிறுவனமொன்றின் ஊடாக அல்லது வேறு ஏதேனும் விதத்தில்) அல்லது மற்றைய ஒப்பந்த அரசில் வியாபாரத்தை மேற்கொள்வதனால் மாத்திரம் ஒரு கம்பனி மற்றையதன் நிரந்தர தாபனமாக அமைய மாட்டாது.

உறுப்புரை 6

**அசையா ஆதனங்களிலிருந்து கிடைக்கும் வருமானம்**

1. ஒப்பந்த அரசு ஒன்றின் வதியுநர் ஒருவருக்கு மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள (விவசாயம் மூலம் அல்லது காடாக்கத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் அடங்கலாக) அசையா ஆதனங்களில் இருந்து கிடைக்கும் வருமானத்தின் மீது மற்றைய ஒப்பந்த அரசில் வரிவிதிக்கப்பட முடியும்.

2. "அசையா ஆதனங்கள்" என்ற சொல் சர்ச்சைக்குரிய ஆதனம் அமைந்துள்ள அரசின் சட்டத்தின் கீழ் அவ்வாசகம் கொண்டுள்ள கருத்திலேயே காணப்படுதல் வேண்டும். கப்பல்களும் வானூர்திகளும் அசையா ஆதனங்களாகக் கருதப்பட மாட்டா. இவ்வுறுப்புரைக்கு இணங்க, அசையா ஆதனங்களிலிருந்து பெறப்படும் வருமானம் என்பதில் அசையா ஆதனத்துக்கான துணை ஆதனங்கள், விவசாயம் மற்றும் காடாக்கத்தின் போது பயன்படுத்தப்படும் கால்நடைகள் மற்றும் உபகரணங்கள், காணிகள் சொத்துக்கள் தொடர்பில் சாதாரண

சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும் உரிமைகள், அசையா ஆதனங்களின் ஆட்சியுரிமை, கனிப்பொருட் படிமங்கள், மூலங்கள் மற்றும் ஏனைய இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதற்கான அல்லது பயன்படுத்தும் உரிமைக்கான மாற்றமடையக் கூடிய அல்லது நிலையான கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை என்பவற்றின் நேரடியான பயன்பாடு, குத்தகைக்கு வழங்குதல் அல்லது வேறு ஏதேனும் வகையிலான பயன்பாடு என்பன உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

3. ஏதேனும் ஒரு தொழில் முயற்சியின் அசையா ஆதனங்களிலிருந்து கிடைக்கும் வருமானங்களுக்கும், சுதந்திர தனிப்பட்ட சேவைகளை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தும் அசையா ஆதனத்திலிருந்து கிடைக்கும் வருமானங்களுக்கும் 1 ஆம், 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள், ஏற்புடையதாகுதல் வேண்டும்.

உறுப்புரை 7

**வியாபார இலாபங்கள்**

1. ஒப்பந்த அரசு ஒன்றின் தொழில் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தரத்தாபனம் ஒன்றின் ஊடாக மற்றைய ஒப்பந்த அரசில் வியாபாரச் செயற்பாடுகளை மேற்கொள்ளாதவிடத்து அவ் ஒப்பந்த அரசில் மாத்திரமே அத்தொழில் முயற்சியின் இலாபங்கள் மீது வரி விதிப்புச் செய்ய முடியும். அத்தொழில் முயற்சியானது மேலே குறிப்பிட்டுள்ளவாறு வியாபாரம் ஒன்றை மேற்கொள்வதாயின் அத்தொழில் முயற்சியின் இலாபங்கள் மீது மற்றைய அரசினால் வரி விதிக்க முடியுமாயினும், அந் நிரந்தரத் தாபனத்திற்கு விதிப்பனவு செய்யப்பட முடியுமான அளவினால் வரையறை செய்யப்படும்.

2. 3 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ், ஒப்பந்த அரசு ஒன்றின் தொழில் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தரத் தாபனமொன்றினூடாக அந்த மற்றைய ஒப்பந்த அரசில் அதன் வியாபாரத்தைக் கொண்டு நடாத்துகின்ற சந்தர்ப்பத்தில், அத்தொழில் முயற்சியுடன் அந்நிலைமை அல்லது அதற்குச் சமனான நிலைகளின் கீழ், அச்செயற்பாடுகளுக்கு அல்லது அதற்குச் சமனான செயற்பாடுகளில் பூரணமாக, சுதந்திரமாக ஈடுபடுகின்ற வேறுபட்ட அல்லது தனியான தொழில் முயற்சியொன்று காணப்படுமாயின் அதற்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியுமான இலாபங்கள், அந்நிரந்தரத் தாபனத்திற்குக் கிடைத்ததாக ஒவ்வொரு ஒப்பந்த அரசிலும் கருதப்படுதல் வேண்டும்.

3. நிரந்தரத் தாபனம் ஒன்றின் இலாபத்தைத் தீர்மானிக்கின்ற போது, நிறைவேற்று மற்றும் பொது நிர்வாகச் செலவுகள் உள்ளிட்ட அந்நிரந்தர தாபனத்தின் வியாபாரச் செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளை, அவை அந்நிரந்தரத் தாபனம் அமைந்துள்ள அரசில் அல்லது பிறிதொரு இடத்தில் மேற்கொள்ளப்பட்டதாக இருப்பினும் அவற்றைக் கழிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல் வேண்டும். எவ்வாறாயினும் (உண்மையாக மேற்கொள்ளப்பட்ட செலவு மீளளிப்புக்களைத் தவிர) காப்புரிமை அல்லது வேறு உரிமைகள் என்பவற்றைப் பயன்படுத்துவதற்காகச் செலுத்தும் வேத்துரிமைகள், கட்டணங்கள் அல்லது அவற்றுக்குச் சமனான மற்றும் கொடுப்பனவுகள் அல்லது விசேட வடிவங்களிலான சேவைகளை மேற்கொள்ளுதல் அல்லது முகாமைக்கான தரகுப் பணமாக அல்லது வங்கித் தொழில் முயற்சியொன்றாக இருக்கும் சந்தர்ப்பத்தில் தவிர, நிரந்தரத் தாபனம் ஒன்றுக்குக் கடனாக வழங்கப்பட்ட பணத்தொகையின் மீதான வட்டியாக அல்லது நிரந்தரத் தாபனம் ஒன்றுக்குக் கடனாக வழங்கப்பட்ட பணத்தொகையின் மீதான வட்டியாக அல்லது நிரந்தரத் தாபனம் ஒன்றின் பிரதான அலுவலகத்திற்கு அல்லது அதன் வேறு அலுவலகம் ஒன்றுக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகைகள் இருப்பின் அவை தொடர்பில், எந்தவொரு கழிப்பனவையும் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கக்கூடாது. மேலும், (உண்மையாகவே மேற்கொள்ளப்பட்ட செலவு மீளளிப்புக்களைத் தவிர) காப்புரிமை அல்லது வேறு உரிமைகளைப் பயன்படுத்துவதற்காகச் செலுத்தும் கட்டணங்கள் அல்லது அவற்றுக்குச் சமமான வேறு கொடுப்பனவுகள் அல்லது விசேட வடிவிலான சேவைகளை மேற்கொள்ளுதல், அல்லது முகாமைக்கான தரகுப் பணமாக அல்லது வங்கித் தொழில் முயற்சி ஒன்றாக இருக்கும் சந்தர்ப்பத்தினைத் தவிர, தொழில் முயற்சியின் பிரதான அலுவலகத்திற்கு அல்லது அதன் வேறு ஏதேனும் அலுவலகம் ஒன்றுக்கு கடனாகச் செலுத்திய பணத்தொகை மீதான வட்டியாக அல்லது நிரந்தரத் தாபனம் ஒன்றினால் தொழில் முயற்சியின் பிரதான அலுவலகத்திடமிருந்து அல்லது வேறு அலுவலகம் ஒன்றிடமிருந்து அறவிடப்பட்ட பணத்தொகைகளை, நிரந்தரத் தாபனத்தின் இலாபங்களைத் தீர்மானிக்கின்ற போது கணக்கில் எடுத்தல் கூடாது.

4. வியாபாரத்தின் மொத்த இலாபம், அதன் பல்வேறு தரப்புக்கள் மத்தியில் பகிரப்படுகின்ற முறையை அடிப்படையாகக் கொண்டு நிரந்தரத் தாபனத்திற்குச் சேரவேண்டிய இலாபத்தை தீர்மானிப்பது, ஒப்பந்த அரசு ஒன்றில் வழக்காறாக இருக்கும் வரை, இவ் உறுப்புரையின் 2 ஆம் பந்தியில் உள்ள எந்தவொன்றும், அவ்வாறு வழக்காற்றின்படி மேற்கொள்ள முடியுமான பகிர்ந்தளிப்பின் ஊடாக வரி அறவிட முடியுமான இலாபத்தைத் தீர்மானிப்பதனைத் தடுக்கக்கூடாது. எனினும், பின்பற்றப்படும் பகிர்வு முறை இவ் உறுப்புரையில் உள்ளடங்கியுள்ள அடிப்படைகளுக்கு இணங்கியதான பெபேறுகளைத் தரக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

5. ஏதேனும் நிரந்தரத் தாபனம் ஒன்று, தொழில்முயற்சிக்காக வெறுமனே பொருட்கள் அல்லது வியாபாரப் பொருட்களைக் கொள்வனவு செய்வதன் காரணமாக அந்நிரந்தரத் தாபனத்துக்கு ஏதேனும் இலாபங்கள் சேர்வதாகக் கொள்ளக்கூடாது.

6. அவ்வாறு செய்யாதிருப்பதற்குப் பொருத்தமான, போதியளவு காரணங்கள் இருப்பின் மாத்திரமே, மேற்குறிப்பிட்ட பந்திகளின் நோக்கங்களுக்காக ஒவ்வொரு வருடமும் ஒரே முறையின் ஊடாக நிரந்தரத் தாபனம் ஒன்றிற்குச் சேர வேண்டிய இலாபம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

7. இவ்வுடன்படிக்கையின் ஏனைய உறுப்புரைகளில் பிரத்தியேகமாகக் குறிப்பிட்டுள்ள வருமான வகைகள், இலாபங்களில் உள்ளடக்கப்படும் சந்தர்ப்பங்களில், அவ் உறுப்புரைகளின் ஏற்பாடுகள் மீது இவ் உறுப்புரையின் ஏற்பாடுகள் தாக்கம் செலுத்தக் கூடாது.

*உறுப்புரை 8*

**கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து**

*1. சர்வதேச போக்குவரத்தில் விமானங்களை அல்லது கப்பல்களை இயக்குவதிலிருந்து கிடைக்கும் இலாபங்கள் மீது தொழில் முயற்சியின் செயற்பாட்டு முகாமைத்துவ நிலையம் அமைந்துள்ள ஒப்பந்த அரசில் மாத்திரமே வரி விதிக்கப்படுதல் வேண்டும்.*

*2. ஒப்பந்த அரசொன்றில் சர்வதேச போக்குவரத்தில் கப்பல்களை இயக்குவதன் மூலம், மற்றைய ஒப்பந்த அரசின் தொழில் முயற்சியொன்று உழைக்கும் இலாபத்தின் மீது, முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசில் வரி அறவிடமுடியுமாயினும் அவ்வாறு அறவிடப்படும் வரி, அதன் 50 சதவீதத்தினால் குறைக்கப்பட வேண்டும்.*

*3. கப்பல் தொழில் முயற்சியொன்றின் செயற்பாட்டு முகாமை நிலையம் கப்பல் ஒன்றில் அமைந்திருக்குமாயின், அக்கப்பலுக்குரிய உள்நாட்டுத் துறைமுகம் அமைந்துள்ள ஒப்பந்த அரசில் அதன் செயற்பாட்டு முகாமைத்துவ நிலையம் அமைந்திருப்பதாகக் கருதப்படும். அவ்வாறான உள்நாட்டுத் துறைமுகம் ஒன்று காணப்படாதவிடத்து அது கப்பலின் இயக்குநர் வதியுநராகவுள்ள ஒப்பந்த அரசில் அமைந்துள்ளதாகக் கருதப்படும்.*

*4. ஏதேனும் கூட்டு வியாபாரத்தில் அல்லது சர்வதேச தொழிற்பாட்டு முகவர் நிறுவனத்தில் பங்கேற்பதன் மூலம் கிடைக்கும் இலாபங்கள் தொடர்பிலும் 1 ஆம், 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளின் ஏற்புடையதாகும்.*

*உறுப்புரை 9*

**கூட்டுத் தொழில் முயற்சிகள்**

*1. (அ) ஒப்பந்த அரசொன்றிலுள்ள தொழில் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசிலுள்ள தொழில்முயற்சியொன்றின் முகாமை, கட்டுப்பாடு அல்லது மூலதனம் தொடர்பில் நேரடியாக அல்லது மறைமுகமாகப் பங்கேற்கும் அல்லது ;*

*(ஆ) ஒரே நபர்கள் ஒப்பந்த அரசு ஒன்றின் தொழில் முயற்சி ஒன்றிலும் மற்றைய ஒப்பந்த அரசின் தொழில் முயற்சியொன்றின் முகாமை, கட்டுப்பாடு அல்லது மூலதனம் என்பவற்றிலும் நேரடியாக அல்லது மறைமுகமாகப் பங்கேற்கும் சந்தர்ப்பத்தில்,*

*மற்றும் அச்சந்தர்ப்பங்கள் இரண்டில் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் சுதந்திர தொழில் முயற்சிகளுக்கிடையில் நடைபெறும் வணிக மற்றும் நிதித் தொடர்புகள் பற்றிய நிபந்தனைகளுக்கு மாற்றமான நிபந்தனைகள் அத்தொழில் முயற்சிகள் இரண்டுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அல்லது விதிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், அந்நிபந்தனைகள் காணப்படாவிட்டால் அத்தொழில் முயற்சிகளில் ஒன்றுக்குச் சேரக்கூடிய எனினும் அந்நிபந்தனையின் காரணமாக அவ்வாறு சேராத ஏதேனும் இலாபங்கள் இருப்பின், அவற்றை அத்தொழில் முயற்சியின் இலாபங்களில் உள்ளடக்கி அதற்கிணங்க இலாபங்கள் மீது வரி அறவிட முடியும்.*

*2. ஒப்பந்த அரசொன்று, தனது தொழில் முயற்சியொன்றின் இலாபத்தில் உள்ளடக்கப்படுவதும் அதற்கிணங்க வரி விதிக்கப்படுவதும் மற்றைய ஒப்பந்த அரசில் வரிவிதிக்கப்பட்டதுமான இலாபத்தை, இரண்டு தொழில் முயற்சிகள் மத்தியில் ஏற்படுத்திக் கொள்ளும் நிபந்தனைகள் சுதந்திரமான தொழில் முயற்சிகள் மத்தியில் ஏற்படுத்திக் கொள்ள முடியுமான நிபந்தனைகளாகவே காணப்படுமிடத்து, முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசின் தொழில் முயற்சியொன்றுக்கு கிடைக்க வேண்டியிருப்பின், அதற்கிணங்க மற்றைய ஒப்பந்த அரசில் விதிக்கப்பட்ட வரியின் அளவுக்குப் பொருத்தமான செம்மையாக்கல்களை மற்றைய அரசு மேற்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய செம்மையாக்கலை நிர்ணயிக்கின்ற போது இவ் ஒப்பந்தத்தின் மற்றைய ஏற்பாடுகள் தொடர்பிலும் உரிய கவனத்தைச் செலுத்துதல் வேண்டும், அத்துடன் அவசியமாயின் ஒப்பந்த அரசுகளின் தகவுடைய அதிகாரிகள் தமக்குள் கலந்தாலோசித்தல் வேண்டும்.*

*உறுப்புரை 10*

**பங்கிலாபங்கள்**

*1. ஒப்பந்த அரசொன்றில் வதியுநரான கம்பனியொன்றினால் மற்றைய ஒப்பந்த அரசின் வதியுநர் ஒருவருக்குச் செலுத்தப்படுகின்ற பங்கிலாபங்கள் மீது அம்மற்றைய அரசில் வரிவிதிக்கப்பட முடியும்.*

*2. எவ்வாறாயினும், பங்கிலாபங்களைச் செலுத்துகின்ற கம்பனி வதியுநராகவுள்ள ஒப்பந்த அரசிலும், அவ் அரசின் சட்டங்களுக்கு இணங்கிய வகையில் அத்தகைய இலாபங்களிலிருந்து வரி அறவிட முடியுமாயினும், அப்பங்கிலாபத்தின் பயனுரிமையாளர் மற்றைய ஒப்பந்த அரசின் வதியுநராக இருப்பின், அறவிடும் வரியானது,*

*(அ) பங்கிலாபங்களின் பயனுரிமையாளர் மற்றைய ஒப்பந்த அரசின் வதியுநரான ஒரு (பங்குடமையல்லாத) ஒரு கம்பனியாகவும் பங்கிலாபத்தைச் செலுத்துகின்ற கம்பனியின் மூலதனத்தில் குறைந்தது 25 சதவீத பங்குகளைக் கொண்டதுமாக இருப்பின் மொத்தப் பங்கிலாபத்தில் 7.5 சதவீதத்தை விஞ்சக் கூடாது.*

*(ஆ) மற்றைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மொத்தப் பங்கிலாபத்தில் 10 சதவீதத்தை விஞ்சக் கூடாது.*

இப்பந்தியானது கம்பனியின் பங்கிலாபங்கள் செலுத்தப்பட்ட இலாபத்தின் மீது வரி விதிப்பது தொடர்பில் தாக்கம் செலுத்தக்கூடாது.

3. இவ்வுறுப்புரையில் பயன்படுத்தப்பட்டுள்ள "பங்கிலாபங்கள்" என்ற வாசகம், பங்குகளிலிருந்து கிடைக்கும் வருமானங்களை அல்லது கடனுரிமையல்லாத வேறு உரிமைகள் மீது கிடைக்கும் வருமானமாகவும், இலாபத்தில் பங்கேற்பதுமான, அரசில் நடைமுறையிலுள்ள சட்டத்திற்கு இணங்க ஏதேனும் வதியுநரான கம்பனியொன்று பங்குகளைப் பகிர்ந்தளிக்குமாயின் உரிய சமனான வரிவிதிப்பனவு ஒழுங்குவிதிகளுக்கு உட்படுவதுமான நிறுவன உரிமைகள் மூலம் கிடைக்கும் வருமானத்தையும் குறிக்கும்.

4. ஒப்பந்த அரசொன்றின் வதியுநராகவுள்ள, பங்கிலாபங்களின் பயனுரிமையாளர், பங்கிலாபங்களைச் செலுத்தும் கம்பனி வதியுநராகவுள்ள மற்றைய ஒப்பந்த அரசில், அங்கு அமைந்துள்ள நிரந்தரத் தாபனம் ஒன்றின் ஊடாக வியாபாரமொன்றைக் கொண்டு நடாத்துவாராயின், அல்லது அங்கு அமைந்துள்ள நிரந்தர அடிப்படையொன்றின் ஊடாகத் தனிப்பட்ட சுயாதீன சேவைகளை அம்மற்றைய அரசினுள்ளே வழங்குவாராயின், அத்துடன் பங்கிலாபம் செலுத்தப்படும் பங்குகளை வைத்திருப்பதற்காக அந்நிரந்தரத் தாபனத்துடன் அல்லது நிரந்தர அடிப்படையுடன் பயனுறுதிமிக்க தொடர்புகளை வைத்திருப்பாராயின், இவ்வுறுப்புரையின் 1 ஆம் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் கூடாது. அத்தகைய சந்தர்ப்பங்களில் 7 ஆம் உறுப்புரையின் அல்லது 14 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

5. ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் கம்பனியொன்று, மற்றைய ஒப்பந்த அரசில் இலாபம் அல்லது வருமானம் உழைக்கும் சந்தர்ப்பத்தில், அக்கம்பனி செலுத்தும் பங்கிலாபங்கள் மீது, மற்றைய அரசில் வதியும் ஒருவருக்குச் செலுத்தப்படும் போது தவிர அல்லது அம்மற்றைய அரசில் அமைந்துள்ள நிரந்தரத் தொழில் முயற்சியொன்றுடன் பயனுறுதிமிக்க முறையில் தொடர்புகள் காணப்படும் போது தவிர கம்பனியால் செலுத்தப்படுகின்ற பங்கிலாபங்கள் தொடர்பில் எந்தவொரு வரியும் அம்மற்றைய ஒப்பந்த அரசு விதிக்காது இருக்க முடியும் என்பதுடன் கம்பனியினால் செலுத்தப்படும் பங்கிலாபங்கள் அல்லது பகிரப்படாத இலாபங்கள் அம்மற்றைய அரசில் எழும் இலாபங்களில் அல்லது வருமானங்களில் மொத்தமாக அல்லது பகுதியாக உள்ளடங்கியிருப்பினும் கம்பனியின் பகிரப்படாத இலாபங்கள் மீதான வரிக்கு உட்படுத்தாதிருக்கவும் முடியும்.

உறுப்புரை 11

**வட்டி**

1. ஒப்பந்த அரசொன்றில் எழும் வட்டி மற்றைய ஒப்பந்த அரசின் வதியுநர் ஒருவருக்கு செலுத்தப்படுமாயின் அவ்வட்டியின் மீது அம்மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்பட முடியும்.

2. எவ்வாறாயினும், அத்தகைய வருமானத்தின் மீது அது எழும் ஒப்பந்த நாட்டின் சட்டங்களுக்கு இணங்க வரி விதிக்கப்பட முடியுமாயினும், வட்டியின் பயனுரிமையாளர் மற்றைய ஒப்பந்த அரசின் வதியுநராக இருப்பின், அவ்வாறு அறவிடப்படும் வரியின் அளவு, மொத்த வட்டித் தொகையின் 10 சதவீதத்தை விஞ்சக் கூடாது.

3. ஒப்பந்த அரசொன்றில் எழுவதும் மற்றைய ஒப்பந்த அரசின் வதியுநர் ஒருவருக்குச் செலுத்தப்படுவதுமான வட்டிக்கு, வட்டியின் பயனுரிமையாளர்,

(i) மற்றைய ஒப்பந்த அரசின் அரசாங்கமாக அல்லது அதன் உள்ளூர் அதிகார சபையொன்றாக ;

(ii) மற்றைய ஒப்பந்த அரசின் தேசிய (மத்திய) வங்கியாக,

(iii) ஒப்பந்த அரசுகளின் அரசாங்கங்கள் அல்லது ஒப்பந்த நாடுகளின் அரசாங்கங்களால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகார சபைகள் காலத்துக்குக் காலம் உடன்படக்கூடிய பட்டியலில் உள்ள மற்றைய ஒப்பந்த அரசுக்கு முழுமையாகச் சொந்தமான நிதி அமைப்புக்களாக (நிறுவனங்களாக) இருப்பின்,

2 ஆம் பந்தியின் ஏற்பாடுகளைப் பொருட்படுத்தாது முதலில் குறிப்பிட்ட அரசில் வரியிலிருந்து விலக்களிக்கப்பட முடியும்.

4. இவ் உறுப்புரையில் பயன்படுத்தப்பட்டுள்ளது போன்று "வட்டி" என்ற வாசகம், ஈட்டுப் பொருள் ஒன்றை அடகாக வைத்துப் பெறப்பட்ட அல்லது அவ்வாறு அடகு வைக்காது பெறப்பட்ட, கடன்காரரின் இலாபத்திற் பங்கு கொள்ளும் உரிமையைக் கொண்ட அல்லது அவ் உரிமையினைக் கொண்டிராத, அனைத்து வகையான கடன் உரிமைகள் மூலமும் கிடைக்கின்ற வருமானங்களையும் குறிப்பாக அரசாங்கப் பிணையங்களிலிருந்து கிடைக்கின்ற வருமானங்களையும் முறிகள் அல்லது தொகுதிக் கடன்களிலிருந்து கிடைக்கின்ற வருமானங்களையும் குறிக்கும். இவ் உறுப்புரையின் நோக்கங்களுக்காக தாமதித்துச் செலுத்தப்படும் கொடுப்பனவுகளுக்காக அறவிடப்படும் தண்டப் பணம் வட்டியாகக் கருதப்படக் கூடாது.

5. ஒப்பந்த அரசு ஒன்றில் வதிபவரான வட்டியின் பயனுரிமையாளர் வட்டி எழும் மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தரத் தாபனம் ஒன்றின் ஊடாக வியாபாரச் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துபவராக இருப்பின் அல்லது அங்கு அமைந்துள்ள நிரந்தர அடிப்படையொன்றின் ஊடாக அம்மற்றைய ஒப்பந்த அரசில் தனிப்பட்ட சுயாதீன சேவைகளை வழங்குவாராயின் அத்துடன்

வட்டி செலுத்தப்படும் கடனுரிமை அந்த நிரந்தர தாபனத்துடன் அல்லது நிரந்தர அடிப்படையுடன் உயிர்ப்பான தொடர்பைக் கொண்டிருப்பின் 1 ஆம், 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாக மாட்டா. அத்தகைய சந்தர்ப்பங்களில் இவ்வுடன்படிக்கையின் 7 ஆம் உறுப்புரையின் அல்லது 14 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

6. வட்டி செலுத்துபவர் ஒப்பந்த அரசொன்றின் வதியுநர் ஒருவராக இருக்குமிடத்து, வட்டி அவ் ஒப்பந்த அரசில் எழுவதாகக் கருதப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், அவ்வட்டியைச் செலுத்துபவர் ஒப்பந்த அரசு ஒன்றின் வதியுநராக இருப்பினும், இல்லாவிடினும் அவருக்கு வட்டியைச் செலுத்துவதற்கு அல்லது சேர்வதற்குரிய கடன்பெறு தன்மை மற்றும் தொடர்புடைய நிரந்தரத் தாபனம் ஒன்று அல்லது நிலையான அடிப்படை ஒன்று ஒப்பந்த அரசு ஒன்றில் காணப்படுமிடத்து, நிரந்தரத் தாபனம் அல்லது நிலையான அடிப்படை அமைந்துள்ள அரசில் அவ் வருமானம் எழுவதாகக் கருதுதல் வேண்டும்.

7. செலுத்துநருக்கும் பயனுரிமையாளருக்கும் இடையில் அல்லது அவர்கள் இருவருக்கும் வேறு எவரேனும் தனியாளொருவருக்கும் இடையில் காணப்படும் விசேட தொடர்பு ஒன்றின் காரணமாகச் செலுத்தப்படும் வட்டியின் அளவு, அது செலுத்தப்படும் கடனுரிமையைக் கவனத்திற்கொண்டு அத்தகைய தொடர்பு காணப்படாத சந்தர்ப்பத்தில் செலுத்துபவர், பயனுரிமையைக் கொண்டுள்ள ஆள் ஆகிய இருவரும் உடன்பட்டிருக்க முடியுமான அளவை விட விஞ்சுமாயின், இறுதியாகக் குறிப்பிட்ட அளவின் மீது மாத்திரமே இவ் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் கொடுப்பனவுகளின் மேலதிகப் பகுதி மீது, இவ்வுடன்படிக்கையின் மற்றைய ஏற்பாடுகளைப் பொருத்தமான முறையில் கவனத்தில் எடுத்து ஒவ்வொரு ஒப்பந்த அரசினதும் சட்டத்திற்கு இணங்க மேலும் வரிகள் விதிக்கப்பட வேண்டும்.

உறுப்புரை 12

**வேத்துரிமைகள்**

1. ஒப்பந்த அரசு ஒன்றில் எழுவதும் மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் ஒருவருக்குச் செலுத்தப்படுவதுமான வேத்துரிமைகள் மீது அம்மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்பட முடியும்.

2. எவ்வாறாயினும் அவ்வேத்துரிமைகள் மீது அவை எழும் ஒப்பந்த அரசிலும் அவ் ஒப்பந்த அரசின் சட்டத்திற்கு இணங்கவும் வரி விதிக்கப்பட முடியும். எனினும், வேத்துரிமைகளின் பயனுரிமையாளர் மற்றைய ஒப்பந்த அரசில் வதிபவராக இருப்பின், அவ்வாறு அறவிடப்படும் வரி, அவ்வேத்துரிமைகளின் மொத்தப் பெறுமானத்தில் 10 சதவீதத்தை விஞ்சக் கூடாது.

3. இவ் உறுப்புரையில் பயன்படுத்தியுள்ளவாறு "வேத்துரிமைகள்" என்ற சொல் சினிமாச் சுருள் திரைப்படங்கள் மற்றும் திரைப்படங்கள் அல்லது வானொலி அல்லது தொலைக்காட்சி ஒளிபரப்புக்குப் பயன்படுத்தும் நாடாக்கள், ஒலிப் பதிவு நாடாக்கள் உள்ளிட்ட ஏதேனும் இலக்கிய, கலை அல்லது விஞ்ஞானப் படைப்புக்களின் வெளியீட்டு உரிமைகள், காப்புரிமைப் பத்திரங்கள், வர்த்தகச் சின்னங்கள், வடிவங்கள் அல்லது மாதிரிகள், கணனி மென்பொருள் நிகழ்ச்சிகள், சுவட்டு வரைபடங்கள், இரகசியப் பொருட்பட்டியலொன்றை அல்லது செயன்முறை ஒன்றைப் பயன்படுத்துவதற்கான அல்லது பயன்படுத்தும் உரிமைக்கான அல்லது கைத்தொழில் உபகரணங்கள், போக்குவரத்து வாகனங்கள் உள்ளிட்ட வர்த்தக உபகரணங்களை அல்லது விஞ்ஞான உபகரணங்களை அல்லது விஞ்ஞான, வர்த்தக அல்லது தொழில்நுட்ப அனுபவம் ஒன்றுடன் தொடர்புடைய தகவல்களைப் பயன்படுத்துவதற்கான அல்லது பயன்படுத்தும் உரிமைக்கான ஒரு அடிப்படையாகக் கிடைத்த எவ்வகையான கொடுப்பனவையும் குறிக்கும்.

4. வேத்துரிமைப் பயனுரிமையாளர் ஒப்பந்த அரசொன்றின் வதியுநராகவும் வேத்துரிமை எழும் மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தரத் தாபனம் ஒன்றின் ஊடாக வியாபாரம் ஒன்றைக் கொண்டு நடாத்துபவராகவும் இருப்பின், வேத்துரிமைகள் செலுத்தப்படுவது எவ்வகையான உரிமை அல்லது ஆதனம் தொடர்பிலாயினும் அவ் உரிமை அல்லது அவ் ஆதனம் அந்நிரந்தரத் தாபனத்துடன் அல்லது நிலையான அடிப்படையுடன் உயிர்ப்பான தொடர்பினைக் கொண்டிருப்பின், இவ் உறுப்புரையின் 1 ஆம், 2 ஆம் பந்திகளிலுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையதாகக் கூடாது. அத்தகைய சந்தர்ப்பத்தில், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு 7 ஆம் உறுப்புரையின் அல்லது 14 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

5. வேத்துரிமைகளைச் செலுத்துபவர் அவ்வரசின் வதியுநராகவே இருக்குமிடத்து, வேத்துரிமைகள் அவ் ஒப்பந்த அரசில் எழுபவையாகக் கொள்ளப்படல் வேண்டும். எவ்வாறாயினும், வேத்துரிமைகளைச் செலுத்தும் நபர் ஒப்பந்த அரசொன்றில் வதிபவராக இருப்பினும் இல்லாவிடினும் வேத்துரிமைகளை செலுத்தும் பொறுப்புடன் தொடர்புடைய நிரந்தரத் தாபனம் ஒன்று அல்லது நிலையான அடிப்படையொன்று ஒப்பந்த அரசொன்றில் அவருக்குச் சொந்தமாக இருந்து, அவ்வேத்துரிமைகள் அந்த நிரந்தரத் தாபனம் அல்லது அந்த நிலையான அடிப்படையினால் செலுத்தப்படுமாயின், அச்சந்தர்ப்பத்தில் நிரந்தரத் தாபனம் அல்லது நிலையான அடிப்படை அமைந்துள்ள அரசில் அவ்வேத்துரிமைகள் எழுவதாகக் கருதுதல் வேண்டும்.

6. செலுத்துபவருக்கும் பயனுரிமையாளருக்கும் இடையில் அல்லது அவர்கள் இருவருக்கும் வேறு எவரேனும் ஆளொருவருக்கும் இடையில் காணப்படும் விசேடமான தொடர்பின் காரணமாக, பயன்பாடு, உரிமை அல்லது தகவல்களைக் கவனத்திற் கொண்டு, செலுத்தப்படும் வேத்துரிமைகள் அத்தகைய தொடர்பு ஏதும் இல்லாதவிடத்து செலுத்துபவரும் பெறுபவரும் உடன்படும் சாத்தியம் கொண்ட தொகையை விட விஞ்சுமாயின், இறுதியாகக் குறிப்பிட்ட தொகைக்கு மாத்திரமே இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும். அச்சந்தர்ப்பத்தில் இவ்வுறுப்புரையின் மற்றைய ஏற்பாடுகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தி, கொடுப்பனவுகளில் காணப்படும் மேலதிக தொகை மீது ஒவ்வொரு ஒப்பந்த அரசினதும் சட்டத்திற்கு இணங்க வரி விதிக்கப்படுதல் வேண்டும்.

*உறுப்புரை 13*

***மூலதன இலாபங்கள்***

*(ஆதனங்களை பாராதீனப்படுத்துவதன் மூலம் கிடைக்கும் பெறுகைகள்)*

*1. ஒப்பந்த அரசொன்றின் வதியுநர் ஒருவர், உறுப்புரை 6 இல் குறிப்பிடப்பட்டுள்ளதும், மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ளதுமான அசையா ஆதனங்களை பாராதீனப்படுத்துவதன் ஊடாகப் பெற்ற இலாபங்கள் மீது அம்மற்றைய அரசில் வரி விதிக்கப்படலாம்.*

*2. ஒப்பந்த அரசு ஒன்றின் தொழில் முயற்சி ஒன்றுக்குச் சொந்தமான, மற்றைய ஒப்பந்த அரசில் உள்ள நிரந்தரத் தாபனம் ஒன்றின் வியாபார ஆதனங்களில் ஒரு பகுதியாகவுள்ள அசையும் ஆதனங்களை பாராதீனப்படுத்துவதன் மூலம் அல்லது ஒப்பந்த அரசொன்றின் வதியுநர் ஒருவர் மற்றைய ஒப்பந்த அரசில் தனிப்பட்ட சுயாதீன சேவைகளை வழங்குவதற்கு வைத்துள்ள நிலையான அடிப்படையுடன் தொடர்புடைய அசையா ஆதனங்களை பாராதீனப்படுத்துவன் மூலம் கிடைக்கும் அத்தகைய நிரந்தரத் தாபனத்தை (தனியாக அல்லது தொழில்முயற்சியுடன் முழுமையாக) அல்லது நிலையான பாராதீனப்படுத்துவதன் மூலம் கிடைக்கும் பெறுகைகள் உள்ளிட்ட பெறுகைகள் மீது அம்மற்றைய ஒப்பந்த அரசில் வரிவிதிக்கப்பட முடியும்.*

*3. சர்வதேசப் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படும் கப்பல்களை அல்லது வானூர்திகளை அல்லது அத்தகைய கப்பல்கள் அல்லது வானூர்திகளை இயக்குவதுடன் தொடர்புடைய அசையும் சொத்துக்களை பாராதீனப்படுத்துவதன் மூலம் கிடைக்கும் பெறுகைகள் மீது அத்தொழில் முயற்சியின் செயற்பாட்டு முகாமை நிலையம் அமைந்துள்ள ஒப்பந்த அரசில் மாத்திரமே வரி விதிக்கப்பட வேண்டும்.*

*4. ஒப்பந்த அரசொன்றின் வதியுநர் ஒருவர் பங்குகளைப் பாராதீனப்படுத்துவதன் மூலம் அல்லது கம்பனியொன்றின் ஆதனப் பெறுமதியில் 50 சதவீதத்தை விஞ்சியதாகவுள்ள ஏனைய பங்கேற்பு அக்கறைகளின் மூலம் மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள அசையா ஆதனங்களிலிருந்து நேரடியாகப் பெறும் பெறுவனவுகள் மீது அம்மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்பட முடியும்.*

*5. இவ் உறுப்புரையின் 1,2,3 மற்றும் 4 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்கள் தவிர எந்தவொரு ஆதனத்தையும் பாராதீனப்படுத்துவதன் மூலம் கிடைக்கும் இலாபங்கள் மீது அவ் ஆதனங்களைப் பாராதீனப்படுத்துபவர் வதியுநராகவுள்ள ஒப்பந்த அரசில் மாத்திரமே வரி விதிக்கப்பட வேண்டும்.*

*உறுப்புரை 14*

***சுயாதீன தனிப்பட்ட சேவைகள்***

*1. மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்பட முடியுமான பின்வரும் சந்தர்ப்பங்களைத் தவிர, உயர்தொழில் சேவைகள் அல்லது அதையொத்த தன்மையிலான வேறு சுயாதீன சேவைச் செயற்பாடுகளுக்காக ஒப்பந்த அரசொன்றின் வதியுநரான ஆளொருவர் பெறும் வருமானத்தின் மீது அவ் ஒப்பந்த அரசில் மாத்திரமே வரி விதிக்கப்பட வேண்டும்.*

*(அ) தனது செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக மற்றைய ஒப்பந்த அரசில் நிலையான அடிப்படையொன்றை நிரந்தரமாக வைத்திருக்குமிடத்து, அந்நிலையான அடிப்படைக்குச் சேர்க்க முடியுமான வருமானத்தின் மீது மாத்திரம் மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்க முடியும்;*

*(ஆ) அத்தகைய ஆளொருவர், பன்னிரண்டு மாத காலப் பகுதியொன்றில் மொத்தமாக 183 நாட்கள் அல்லது அதனை விட அதிகமான காலப் பகுதியொன்றில் அல்லது காலப் பகுதிகளில் மற்றைய ஒப்பந்த அரசில் தங்கியிருக்குமிடத்து அம்மற்றைய ஒப்பந்த அரசில் தனது செயற்பாடுகள் மூலம் அவர் பெறும் வருமானத்தின் மீது மாத்திரம் மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்க முடியும்.*

*2. "உயர்தொழில் சேவைகள்" என்ற வாசகம் சுயாதீனமான விஞ்ஞான, இலக்கிய, கலை, கல்வி அல்லது கற்பித்தல் செயற்பாடுகளையும் மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், பொறியியலாளர்கள், கட்டடக்கலைஞர்கள், பல் வைத்தியர்கள், கணக்காளர்கள் ஆகியோரின் சுயாதீன செயற்பாடுகளையும் குறிப்பாக உள்ளடக்கும்.*

*3. "நிரந்தர அடிப்படை" என்ற வாசகம் தனியாளொருவர் தனிப்பட்ட சுயாதீன சேவைகளை முழுமையாக அல்லது ஒரு பகுதியாக மேற்கொள்ளும் அலுவலகத்தை அல்லது அறையைக் குறிக்கும்.*

உறுப்புரை 15

**சுயாதீனமல்லா தனிப்பட்ட சேவைகள்**

1. இந்த ஒப்பந்தத்தின் 16, 18 மற்றும் 19 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய ஒப்பந்த அரசொன்றின் வதியுநர் ஒருவர் தனது தொழில் மூலம் பெறும் சம்பளம், வேதனங்கள் மற்றும் அதனையொத்த பெறுவனவுகள் மீது அவ் ஊழியம் மற்றைய ஒப்பந்த அரசில் மேற்கொள்ளப்பட்டாலேயன்றி, அந்த அரசில் மாத்திரமே வரி விதிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு தொழில் புரியும் பட்சத்தில் அந்தத் தொழில் மூலம் உழைக்கும் ஊதியத்தின் மீது அம்மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிப்புக்குள்ளாக்க முடியும்.

2. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் மற்றைய ஒப்பந்த அரசில் ஆற்றப்படும் ஊதியம் தொடர்பில் ஒப்பந்த அரசில் வதியுமொருவரால் பெறப்படும் வேதனங்களின் மீது,

(அ) அவ்வேதனத்தைப் பெறுபவர் குறித்த நிதி ஆண்டு ஆரம்பிக்கும் அல்லது முடிவடையும் ஏதேனும் 12 மாத காலப்பகுதியினுள் மொத்தமாக 183 நாட்களை விஞ்சாத ஒரு காலப்பகுதியில் அல்லது காலப்பகுதிகளில் அந்த மற்றைய ஒப்பந்த அரசினுள் இருப்பாராயின் ; அத்துடன்

(ஆ) வேதனங்கள், மற்றைய ஒப்பந்த அரசில் வதியாத தொழில்தருநரொருவரால் அல்லது அவர் சார்பில் செலுத்தப்படுவதாயின் ; அத்துடன்

(இ) அவ்வேதனமானது, தொழில்தருநர் மற்றைய அரசில் வைத்திருக்கும் நிரந்தர நிறுவனமொன்றினால் அல்லது நிலையான அடிப்படையொன்றினால் செலுத்தப்படாதவிடத்து ;

முதலில் குறிப்பிடப்பட்ட அரசில் மாத்திரம் வரி விதிக்கப்பட வேண்டும்.

3. இந்த உறுப்புரையின் முற்போந்த பந்திகள் எவ்வாறிருப்பினும் , ஒப்பந்த அரசொன்றின் தொழில் முயற்சியினால் சர்வதேசப் போக்குவரத்தில் இயக்கப்படும் கப்பல் ஒன்றில் அல்லது வானூர்தியொன்றில் ஆற்றப்படும் ஊழியத்திற்காகப் பெறப்படும் ஊதியத்தின் மீது தொழில்முயற்சியின் செயற்பாட்டு முகாமை நிலையம் அமைந்துள்ள அரசில் மாத்திரமே வரி விதிக்கப்பட வேண்டும்.

உறுப்புரை 16

**பணிப்பாளர் கட்டணங்கள்**

ஒப்பந்த அரசொன்றின் வதியுநர் ஒருவர், மற்றைய ஒப்பந்த அரசில் வதிவுள்ள கம்பனியொன்றின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக அல்லது அதனையொத்த வேறு ஏதேனும் ஒரு பதவியை வகிப்பதன் மூலம் உழைக்கும் பணிப்பாளர் கட்டணங்கள் மற்றும் அவற்றையொத்த கொடுப்பனவுகள் மீது அந்த மற்றைய அரசில் வரி விதிக்கப்படலாம்.

உறுப்புரை 17

**கலைஞர்களும் விளையாட்டு வீரர்களும்**

1. 14 ஆம், 15 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஒப்பந்த அரசொன்றின் வதியுநர் ஒருவர், அரங்கு, இயக்கத் திரைப்படம், வானொலி அல்லது தொலைக்காட்சி என்பவற்றின் கலைஞராக அல்லது இசைக் கலைஞராக அல்லது விளையாட்டு வீரராக மேற்கொள்ளும் தனிப்பட்ட தொழிற்பாடுகளிலிருந்து மற்றைய ஒப்பந்த அரசில் உழைக்கும் வருமானத்தின் மீது அம்மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்படலாம்.

2. கலைஞர் அல்லது விளையாட்டு வீரர் ஒருவர் தனது தனிப்பட்ட முயற்சிகளுக்காகப் பெறும் வருமானம் அக்கலைஞருக்கு அல்லது விளையாட்டு வீரருக்குச் சேராமல், வேறொருவரைச் சென்றடையுமிடத்து 7, 14, 15 ஆம் உறுப்புரைகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அவ்வருமானத்தின் மீது அக்கலைஞரின் அல்லது விளையாட்டு வீரரின் செயற்பாடுகள் இடம்பெறும் ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்படலாம்.

3. 1 ஆம் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளிலிருந்து பெறப்படும் வருமானத்திற்கு, அவ்விஜயத்துக்கு முழுமையாக அல்லது கணிசமான அளவு மற்றைய அரசின் அல்லது இரு ஒப்பந்த அரசுகளின் அல்லது உள்ளூர் அதிகார சபையொன்றின் நிதிகளிலிருந்து அனுசரணை வழங்கப்பட்டிருப்பின், அச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் அரசில் வரிவிலக்களிக்கப்படும்.

உறுப்புரை 18

**ஓய்வூதியங்கள் மற்றும் ஆண்டுத்தொகைகள்**

1. 19 ஆம் உறுப்புரையின் 2 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைவாக, ஒப்பந்த அரசொன்றின் வதியுநர் ஒருவருக்கு அவர் கடந்த காலத்தில் மற்றைய ஒப்பந்த அரசதில் மேற்கொண்ட சேவையை கவனத்தில் எடுத்துச் செலுத்தப்படும் ஓய்வூதியம் மற்றும் அதனையொத்த வேதனங்கள் மீதும் அத்தகைய வதியுநர் ஒருவருக்கு அம்மற்றைய அரசிலிருந்து செலுத்தப்படும் ஆண்டுத் தொகைகள் மீதும் அம்மற்றைய அரசில் வரி விதிக்கப்பட முடியும்.

2. "ஆண்டுத்தொகை" என்ற சொல் போதுமானதும் முழுமையானதுமான கிரயத்துக்காக கொடுப்பனவு செலுத்த வேண்டும் என்ற கடப்பாடொன்றின் கீழ், பருவகால அடிப்படையில் அல்லது ஆயுட் காலத்தில் அல்லது குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியில் அல்லது அறியக் கூடிய ஒரு காலப் பகுதியில் பணமாக அல்லது பணப் பெறுமதியில் செலுத்தப்பட வேண்டிய ஒரு தொகையைக் குறிக்கின்றது.

3. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஒப்பந்த அரசொன்றின் வதியுநராக இருப்பதன் காரணமாகத் தனிப்பட்ட ஆளொருவர், மற்றைய ஒப்பந்த அரசின் பொதுத் திட்டத்தின் கீழ் அல்லது சமூகப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பெறும் ஓய்வூதியங்கள் மற்றும் அதனையொத்த வேறு ஊதியங்கள் மீது அம்மற்றைய ஒப்பந்த அரசில் மாத்திரமே வரி விதிக்கப்பட வேண்டும்.

உறுப்புரை 19

**அரசாங்க சேவை**

1. (அ) ஒப்பந்த அரசொன்று அல்லது உள்ளூர் அதிகார சபையொன்று அந்த அரசுக்கு அல்லது உள்ளூர் அதிகார சபைக்கு வழங்கிய சேவைக்காக எவரேனும் ஆளொருவருக்குச் செலுத்தும் சம்பளங்கள், வேதனங்கள் மற்றும் அதனையொத்த வேறு ஊதியங்கள் மீது அவ் அரசில் மாத்திரமே வரி விதிக்கப்பட வேண்டும்.

(ஆ) எவ்வாறாயினும், அச்சேவையானது மற்றைய ஒப்பந்த அரசில் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவ் ஆள் அவ் அரசின் வதியுநராகவும்,

(i) மற்றைய அரசின் நாட்டினத்தவராகவும், அல்லது
(ii) சேவைகளை ஆற்றும் நோக்கத்திற்காக மட்டும் அந்த அரசின் வதியுநராக மாறியிராதவராகவும் இருப்பின்,

அத்தகைய சம்பளம், வேதனம் அதையொத்த ஊதியம் என்பவற்றின் மீது மற்றைய ஒப்பந்த அரசில் மட்டுமே வரி விதிக்கப்படலாம்.

2. ஒப்பந்த அரசொன்றினால் அல்லது உள்ளூர் அதிகார சபையொன்றினால் அல்லது அவற்றால் உருவாக்கப்பட்ட நிதிகளிலிருந்து அந்த அரசிற்கு அல்லது அந்த உள்ளூர் அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட சேவைகளுக்காக எவரேனும் ஆளொருவருக்குச் செலுத்தப்படும் ஏதேனும் ஓய்வூதியம் மீது அந்த அரசில் மாத்திரமே வரி விதிக்கப்பட வேண்டும்.

3. 15, 16, 17 மற்றும் 18 ஆம் உறுப்புரைகளின் ஏற்பாடுகள், ஒப்பந்த அரசொன்றினால் அல்லது உள்ளூர் அதிகாரசபை ஒன்றினால் கொண்டு நடாத்தப்படும் ஏதாயினும் வியாபாரத்திற்கு வழங்கிய சேவைகளுக்காக வழங்கப்படும் வேதனங்களுக்கும் ஓய்வூதியங்களுக்கும் அதனையொத்த ஊதியங்களுக்கும் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

4. இவ்வுறுப்புரையில் பயன்படுத்தப்பட்டுள்ள "ஒப்பந்த அரசு" என்பது இலங்கையின் விடயத்தில் இலங்கையின் அரசாங்கத்தை, உள்ளூராட்சி நிறுவனங்களை, மத்திய வங்கியைக் குறிக்கும்.

உறுப்புரை 20

**பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள்**

1. ஒப்பந்த அரசொன்றின் வதியுநராகவிருந்த பேராசிரியர் ஒருவர், அல்லது ஆராய்ச்சியாளர் ஒருவர் மற்றைய ஒப்பந்த அரசுக்கு விஜயம் செய்வதற்கு உடன் முந்திய காலத்தில், மற்றைய ஒப்பந்த அரசின் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின், கல்லூரியொன்றின், பாடசாலையொன்றின் அல்லது அவற்றையொத்த கல்வி நிறுவனமொன்றின் அழைப்பின் பேரில், கற்பிக்கும் அல்லது ஆராய்ச்சியில் ஈடுபடும் நோக்கில் அல்லது அவ்விரு நோக்கங்களுக்குமாக மாத்திரம் தொடர்ச்சியாக இரண்டு வருடங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதியில் அம்மற்றைய ஒப்பந்த அரசில் தங்கியிருப்பாராயின் அவர் அத்தகைய கற்பித்தல் அல்லது ஆராய்ச்சிக்காகப் பெறும் ஊதியத்துக்கு அம்மற்றைய ஒப்பந்த அரசில் வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

*2. எவரேனும் ஆளொருவர் மேற்கொள்ளும் ஆய்வு, பொது நலனுக்காகவன்றி, குறித்துரைக்கப்பட்ட ஆளொருவரின் அல்லது ஆட்களின் நலனுக்காக மேற்கொள்ளப்படுமாயின் அத்தகைய ஆய்வுக்காகப் பெறப்படும் எந்தவொரு ஊதியத்திற்கும் 1 ஆ பந்தியின் கீழ் வரிவிலக்களிக்கப்பட மாட்டாது.*

*உறுப்புரை 21*

**மாணவர்கள் மற்றும் பயிலுநர்கள்**

*1. ஒப்பந்த அரசொன்றுக்கு வருவதற்கு உடன் முந்திய காலத்தில் மற்றைய ஒப்பந்த நாட்டின் வதியுநராக இருந்த அல்லது வதியுநராக இருக்கும் அத்துடன் தனது கல்வி அல்லது பயிற்சிக்காக மட்டும் முதலில் கூறப்பட்ட ஒப்பந்த அரசில் இருக்கின்ற மாணவரொருவர், பயிலுநர் ஒருவர் அல்லது தொழில் பயிலுநர் ஒருவர் தனது பராமரிப்பு, கல்வி அல்லது பயிற்சி அலுவல்களுக்காக பெறும் கொடுப்பனவுகளை முதலில் குறிப்பிட்ட அரசிற்குப் புறம்பான மூலங்களில் இருந்து பெறுவதாயின் அவற்றுக்கு அந்த அரசில் வரிகளிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும்.*

*2. 1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்படாத மானியங்கள், புலமைப்பரிசில்கள் மற்றும் ஊதியங்களைப் பொறுத்தவரையில், 1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள மாணவர் ஒருவர் அல்லது வியாபாரம் பயிலும் ஒருவர் அத்தகைய கல்விக்காக அல்லது பயிற்சிக்காக, தான் தங்கியிருக்கும் ஒப்பந்த அரசின் வதியுநர்களுக்கு கிடைக்கும் அதே வரிவிலக்குகளை, நிவாரணங்களை அல்லது குறைப்புக்களை அவர் பெறுவதற்கு உரித்துடையவராவார்.*

*உறுப்புரை 22*

**வேறு வருமானங்கள்**

*1. ஒப்பந்த அரசொன்றின் வதியுநர் ஒருவரின் இவ் ஒப்பந்தத்தின் முற்போந்த உறுப்புரைகளில் குறிப்பிடப்படாத வருமானங்கள் மீது அவை எங்கு எழுந்த போதிலும் அவ் அரசில் மாத்திரமே வரி விதிக்கப்பட வேண்டும்.*

*2. ஒப்பந்த அரசொன்றின் வதியுநர் ஒருவர் மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தரத் தாபனம் ஒன்றின் ஊடாக அவ் அரசில் தொழில் ஒன்றைக் கொண்டு நடாத்துவாராயின் அல்லது அந்த ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தர அடிப்படையொன்றின் ஊடாக அம்மற்றைய ஒப்பந்த அரசில் சுயாதீனமான தனிப்பட்ட சேவையொன்றை நடாத்துவாராயின் அத்துடன் வருமானம் செலுத்தப்படும் உரிமை அல்லது ஆதனம் மேலே குறிப்பிட்ட நிரந்தர தாபனத்துடன் அல்லது நிரந்தர அடிப்படையுடன் பயனுறுதிமிக்க தொடர்பைக் கொண்டிருக்குமாயின், 6 ஆம் உறுப்புரையின் 2 ஆம் பந்தியில் பொருட்கோடல் செய்யப்பட்டுள்ளவாறு அசையா ஆதனங்களிலிருந்து கிடைக்கும் வருமானமல்லாத வருமானத்திற்கு இவ் உறுப்புரையின் 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையதாக மாட்டாது. அத்தகைய சந்தர்ப்பங்களில் 7 ஆம் உறுப்புரையின் அல்லது 14 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் தேவைக்கு ஏற்ப ஏற்புடையதாகும்.*

*3. இவ்வுறுப்புரையின் 1 ஆம் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளைக் கவனத்திற் கொள்ளாது, ஒப்பந்த அரசொன்றின் வதியுநராகவுள்ள தனிப்பட்ட ஆளொருவர், சூதாட்டம் மற்றும் சீட்டிழுப்புக்கள் மூலம் பெறுவதும் மற்றைய ஒப்பந்த அரசில் எழுவதுமான வருமான வகைகள் மீது அம்மற்றைய ஒப்பந்த அரசில் விதிக்கப்பட முடியும்.*

*உறுப்புரை 23*

**இரட்டை வரி விதிப்பனவினை நீக்குதல்**

*1. ஒப்பந்த அரசுகள் ஒவ்வொன்றிலும் நடைமுறையிலுள்ள சட்டங்கள், அந்நாடுகளின் வருமானத்தின் (இலாபத்தின்) மீதான வரிவிதிப்பைத் தொடர்ந்தும் நிர்வகிக்கும். வருமானங்கள் (இலாபங்கள்) இரு நாடுகளிலும் வரிவிதிப்புக்குள்ளாகும் சந்தர்ப்பத்தில், இவ்வுறுப்புரையின் பின்வரும் பந்திகளுக்கு ஏற்ப இரட்டை வரித்தவிர்ப்பு வழங்கப்படும்.*

*2. ஒப்பந்த அரசொன்றின் வதியுநர் ஒருவர், இவ்வுடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க உழைக்கும் வருமானம் (இலாபம்) மற்றைய ஒப்பந்த அரசில் வரிவிதிப்புக்குள்ளாக்கக்கூடுமாயின், மற்றைய ஒப்பந்த அரசில் செலுத்தப்பட்ட வருமான (இலாப) வரித் தொகையை முதலில் குறிப்பிட்ட அரசில் விதிக்கப்படும் வருமான (இலாப) வரிக்கான வரிவரவாகக் கழிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும். அத்தகைய கழிப்பனவுகள் வழங்கப்பட்ட வரிவரவுக்கு கணிப்பீடு செய்யப்பட்டவாறு வருமான (இலாப) வரியின் பகுதியினை விஞ்சுவதுடன் மற்றைய ஒப்பந்த அரசில் வருமானத்துடன் சேரக்கூடிய பகுதியின் மீது வரி விதிக்கப்பட முடியும்.*

*3. ஒப்பந்த அரசொன்றின் வதியுநர் ஒருவரினால் பெறப்பட்ட வருமானம் (இலாபம்) இந்த ஒப்பந்தத்தின் ஏதேனும் ஏற்பாடுகளுக்கு அமைவாக அவ்வரசில் வரியிலிருந்து விலக்களிக்கப்படும் அத்தகைய அரசு அத்தகைய வதியுநரின் எஞ்சிய இலாபத்தின் மீது வரிவிதிப்பனவுத் தொகையினைக் கணிப்பீடு செய்யும் போது வருமானத்திலிருந்து (இலாபம்) விலக்களிக்கப்பட்டதனையும் கணக்கில் எடுத்தல் வேண்டும்.*

*4. இவ்வுறுப்புரையின் நோக்கங்களுக்காக, ஒப்பந்த அரசொன்றில் செலுத்தப்பட்ட வருமான (இலாப) வரி செலுத்தப்பட முடியுமான வருமான வரியில் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் காலப்போக்கில் பொருளாதார அபிவிருத்தி அல்லது முதலீட்டு ஊக்குவிப்புக்காக அவ் அரசின் சட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட வரி ஊக்குவிப்புக்களைக் கவனத்திற் கொண்டு வரிக் குறைப்பு அல்லது நீக்கப்படும்.*

*உறுப்புரை 24*

**பாகுபாடு காட்டாமை**

*1. ஒப்பந்த அரசொன்றின் நாட்டினத்தவர்களை மற்றைய ஒப்பந்த அரசில் அம்மற்றைய அரசின் அதே நிலையிலுள்ள நாட்டினத்தவர்கள் மீது விதிக்கப்படும் வரிகளையும் அதனுடன் தொடர்புடைய தேவைப்பாடுகளையும் விட சுமையாக அமையும் எந்தவொரு வரிவிதிப்புக்கும் அல்லது அதனுடன் தொடர்புடைய தேவைப்பாட்டுக்கும் குறிப்பாக, வதிவை அடிப்படையாகக் கொண்டு உட்படுத்தக் கூடாது.*

*2. ஒப்பந்த அரசொன்றின் தொழில் முயற்சியொன்றுக்குச் சொந்தமான மற்றைய ஒப்பந்த அரசிலுள்ள நிரந்தர தாபனமொன்றின் மீது, அச்செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற மற்றைய அரசின் தொழில்முயற்சிகள் மீதான வரிவிதிப்பை விடப் பாதகமான முறையில் அம்மற்றைய அரசில் வரி விதிக்கப்படக்கூடாது. ஒப்பந்த அரசொன்று தனது வதியுநர்களுக்கு சிவில் நிலைமைகளை அல்லது குடும்ப பொறுப்புக்களை அடிப்படையாகக் கொண்டு வரிநோக்கங்களுக்காக வழங்குகின்ற தனிப்பட்ட கொடுப்பனவுகள், நிவாரணங்கள், கழிப்பனவுகள் மற்றைய ஒப்பந்த அரசின் வதியுநர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற கடப்பாட்டை இவ் ஏற்பாடு ஏற்படுத்துகின்றது எனக் கொள்ளக்கூடாது.*

*3. 7 ஆம் உறுப்புரையின் 3 ஆம் பந்தி, 9 ஆம் உறுப்புரையின் 1 ஆம் பந்தி 11 ஆம் உறுப்புரையின் 7ஆம் பந்தி, 12 ஆம் உறுப்புரையின் 6 ஆம் பந்தி ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பயன்வலுப்பெறும் சந்தர்ப்பங்களைத் தவிர, ஒப்பந்த அரசொன்றின் தொழில் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசின் வதியுநர் ஒருவருக்குச் செலுத்துகின்ற வட்டி, வேத்துரிமைகள் மற்றும் ஏனைய செலவுகள் என்பவற்றை, அத்தொழில்முயற்சியின் வரிவிதிக்கத்தக்க இலாபங்களைக் கணிப்பதற்காக, முதலில் குறிப்பிட்ட அரசின் வதியுநர் ஒருவருக்குச் செலுத்தியதாகக் கருதி அதே நிபந்தனைகளின் கீழ் கழிப்பனவு செய்ய முடியும். அத்துடன் ஒப்பந்த அரசொன்றின் தொழில் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசின் வதியுநர் ஒருவருக்குச் செலுத்த வேண்டியுள்ள எந்தவொரு கடன் தொகையையும் அத்தொழில் முயற்சியின் வரி அறவிட முடியுமான ஆதனத்தைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, முதலில் குறிப்பிட்ட அரசின் வதியுநர் ஒருவருடன் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட ஒன்றாகக் கருதி அதே நிபந்தனைகளின் கழிப்பனவு செய்ய முடியும்.*

*4. ஒப்பந்த அரசொன்றின் தொழில்முயற்சிகளின் மூலதனம் முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியாக மற்றைய ஒப்பந்த அரசின் வதியுநர் ஒருவருக்கு அல்லது பல வதியுநர்களுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாகச் சொந்தமாக இருக்குமிடத்து அல்லது நிர்வகிக்கப்படுமிடத்து, முதலில் குறிப்பிட்ட அரசில் அது போன்ற வேறு தொழில் முயற்சிகள் மீது விதியாகும் அல்லது விதிக்க முடியுமான வரிகளுக்கு அல்லது அதனுடன் தொடர்புடைய வேறு தேவைகளிலிருந்து மிகவும் வேறுபட்ட அல்லது சுமையாக அமையக்கூடிய அளவுக்கு கடினமான எந்தவொரு வரியையும் விதிக்கவோ அல்லது அதனுடன் தொடர்புடைய வேறு தேவைகளுக்காக முதலில் குறிப்பிட்ட அரசில் உட்படுத்தவோ கூடாது.*

*5. இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகள் உறுப்புரை 2 இல் உள்ளடக்கப்பட்டுள்ள வரிகள் தொடர்பில் ஏற்புடையதாகும்.*

*உறுப்புரை 25*

**இருவாயினொத்த உடன்பாட்டு நடைமுறை**

*1. ஒப்பந்த அரசொன்றின் வதியுநர் ஒருவர், ஒப்பந்த அரசுகளில் ஒன்றின் அல்லது இரண்டினதும் நடவடிக்கைகளின் விளைவாக இவ்வுடன்படிக்கைக்கு மாற்றமான முறையில் தன் மீது வரிவிதிக்கப்படுகின்றது என அல்லது வரி விதிக்கப்படலாம் எனக் கருதுவாராயின், அவ்வரசுகளின் வரிவிதிப்புச் சட்டங்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பரிகாரங்களைக் கவனத்திற் கொள்ளாது, அவர், தான் வதியும் ஒப்பந்த நாட்டின் தகுதி வாய்ந்த அதிகாரியிடம் அல்லது அவரது விடயம் 24 ஆம் உறுப்புரையின் 1 ஆம் பந்தியின் கீழ் உள்ளடங்குமாயின், அவர் வதியுநராகவுள்ள அந்த ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரியிடம் விளக்கங்களைச் சமர்ப்பிக்கலாம். இவ் ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியதாக அமையாத வரிவிதிப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதற்குக் காரணமான செயற்பாடு தொடர்பான முதலாம் அறிவித்தல் வெளியிடப்பட்டு மூன்று வருட காலத்தினுள் அவ்விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.*

*2. தகுதிவாய்ந்த அதிகாரிக்கு, அவ்வாட்சேபனை நியாயமானதாகத் தோன்றியும் தாமாக ஒரு பொருத்தமான தீர்வுக்கு வரமுடியாமலும் இருப்பின், அவர், இவ்வுடன்படிக்கைக்கு மாறான வகையிலான வரிவிதிப்பைத் தவிர்க்கும் பொருட்டு மற்றைய ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரியுடனான இருவாயினொத்த உடன்பாட்டின் மூலம் அவ்விடயத்தைத் தீர்த்து வைக்க முயற்சிக்கலாம். எடுக்கப்படும் எந்த உடன்பாடும் ஒப்பந்த நாடுகளின் உள்ளூர்ச் சட்டத்தின் எந்த கால வரைறையையும் பொருட்படுத்தாது நடைமுறைப்படுத்தப்பட முடியும்.*

*3. இந்த ஒப்பந்தத்தினைப் பொருட்கோடல் செய்வது அல்லது ஏற்புடையதாக்குவது தொடர்பில் ஏதேனும் சிரமங்கள் அல்லது சந்தேகங்கள் தோன்றுமாயின் அவற்றை இருவாயினொத்த உடன்பாட்டின் மூலம் தீர்த்துக்கொள்வதற்கு ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகள் முயற்சித்தல் வேண்டும். இவ்ஒப்பந்தத்தில் ஏற்பாடுகள் எதுவும் காணப்படாத சந்தர்ப்பங்களில் இரட்டை வரி விதிப்பினை நீக்குவது தொடர்பில் அவர்கள் கூட்டாகப் பேச்சுவார்த்தை நடாத்துதல் வேண்டும்.*

*4. மேலே உள்ள பந்திகளின் கருத்துக்கள் தொடர்பில் உடன்பாட்டுக்கு வரும் நோக்கில் ஒப்பந்த அரசுகளின் தகவுடைய அதிகாரிகள் நேரடியாக ஒருவருக்கு ஒருவர் கருத்துப் பரிமாற்றங்களைச் செய்து கொள்ள முடியும்.*

உறுப்புரை 26

**தகவற் பரிமாற்றம்**

*1.* இவ்வொப்பந்தத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதுடன் தொடர்புடையது என்று முழுமையான அனுமானத்திற்கு வரக்கூடிய தகவல்களை அல்லது வரிவிதிப்புக்கள் இவ் ஒப்பந்தத்திற்கு முரணில்லாத வரை ஒப்பந்த அரசுகள் அவற்றின் அரசியல் உப பிரிவுகள் அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களின் சார்பில் விதிக்கப்படும் எந்தவொரு விபரத்திற்குமுரிய வரிகள் தொடர்பான சட்ட நிர்வாகங்களை அல்லது நடைமுறைப்படுத்துவதற்கான தகவல்களை ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகள் பரிமாறிக்கொள்ளல் வேண்டும். தகவல் பரிமாற்றத்தை 1 ஆம் 2 ஆம் உறுப்புரைகள் கட்டுப்படுத்தமாட்டா.

*2.* 1 ஆம் பந்தியின் கீழ் ஒப்பந்த அரசொன்றுக்கு கிடைக்கின்ற எந்தவொரு தகவலையும் அந்த அரசின் உள்ளூர் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட அந்தரங்க தகவல்களாகக் கருத வேண்டும். முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது மேலே குறிப்பிடப்படாத வரி மதிப்பீடுகள், வரிசேகரித்தல், அவ்வரிகளை நடைமுறைப்படுத்துதல், வழக்குத் தொடர்தல் அல்லது 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட வரிகள் தொடர்பான மேன்முறையீடுகள் தொடர்பில் தீர்மானம் எடுத்தல் என்பவற்றை (நீதிமன்றங்கள், நிர்வாக சபைகள் உள்ளிட்ட) அவற்றுடன் தொடர்புடைய ஆட்களுக்கு மாத்திரமே வெளிப்படுத்த முடியும். அத்தகைய ஆட்கள் அல்லது அலுவலர்கள் இத்தகவல்களை அத்தகைய நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்த முடியும். அவர்கள் பகிரங்க நீதிமன்ற நடவடிக்கைகளின் போது அல்லது நீதிமன்றத் தீர்ப்புக்களில் அத்தகவல்களை வெளிப்படுத்த முடியும்.

*3.* 1 ஆம் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள், ஒப்பந்த அரசுகள் மீது பின்வரும் கடப்பாடுகளை விதியாக்கும் என்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கருதக் கூடாது.

(அ) அவ்வொப்பந்த அரசின் அல்லது மற்றைய ஒப்பந்த அரசின் சட்டங்களுக்கும் நிர்வாக முறைக்கும் முரண்பட்ட வகையிலான நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

(ஆ) அவ்வொப்பந்த அரசின் அல்லது மற்றைய ஒப்பந்த அரசின் சட்டங்களின் கீழ் அல்லது சாதாரண நிர்வாக முறையின் கீழ் பெறமுடியாத ஆவணங்கள் அரச ஆவணங்கள் மற்றும் விபரங்களை வழங்குதல்.

(இ) ஏதாயினும் வணிக, வியாபார, கைத்தொழில், வர்த்தக உயர்தொழில் இரகசியங்களை அல்லது வணிக முறைமை வெளிப்படுத்தும் தகவலை வெளிப்படுத்தல் அரச கொள்கைகளுக்கு முரணான ஏதேனும் தகவல்களை வழங்குதல். (Order Public)

*4.* இந்த உறுப்புரைக்கு அமைவாக ஒப்பந்த அரசொன்றினால் தகவல்கள் வேண்டப்படுமாயின், மற்றைய ஒப்பந்த அரசு தனது வரிநோக்கங்களுக்காக அத்தகைய தகவல்கள் அவசியப்படாத போதிலும், வேண்டப்பட்ட தகவல்களைப் பெறுவதற்காக அத்தகவல்களைச் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். முன்னால் குறிப்பிட்ட வாக்கியத்திலுள்ள கடப்பாடு, 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட வரையறைகளுக்கு உட்பட்டதாக இருப்பினும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அந்த வரையறைகளின் ஊடாக ஒப்பந்த அரசு ஒன்று, வெறுமனே அத்தகைய தகவல்கள் தொடர்பில் உள்நாட்டு விடயங்களில் அக்கறையின்மையின் காரணமாக அத்தகவல்களை வழங்காதிருப்பதற்கான அனுமதியாக அதனை விளங்கிக்கொள்ளக் கூடாது.

*5.* தகவல்கள் வங்கியொன்றிடம், வேறு நிதி நிறுவனமொன்றிடம், முகவராக அல்லது பிடியூசரி நிலையில் தொழிற்படும் பெயர் குறிப்பிட்ட ஒருவரிடம் அல்லது ஆளொருவரிடம் காணப்படுவதை அல்லது அவை ஆளொருவரின் உரிமை அக்கறைகளுடன் தொடர்புடையதாக இருப்பதனைக் காரணம் காட்டி, ஒப்பந்த அரசொன்று கோரப்பட்ட தகவல்களை வழங்க மறுப்பதற்கான அனுமதியாக 3 ஆம் பந்தியின் ஏற்பாடுகளைப் புரிந்துகொள்ளக்கூடாது.

உறுப்புரை 27

**இராசதந்திர தூதுக்குழுக்களின் அங்கத்தவர்கள் மற்றும் பேராளர் பதவிகள்**

இவ்வொப்பந்தத்தின் பகுதியெதுவும் சர்வதேசச் சட்டத்தின் பொது விதிகளின் கீழ் அல்லது விஷேட உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளின் கீழ் உள்ளடங்கும் இராசதந்திர தூதுக்குழுக்களின் அங்கத்தவர்கள் மற்றும் பேராளர் பதவிகளுக்குரிய நிதி ரீதியான சிறப்புரிமைகளைப் பாதிக்கக்கூடாது.

உறுப்புரை 28

**நடைமுறைப்படுத்தல்**

*1.* ஒப்பந்த அரசுகள் ஒவ்வொன்றும் இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான உள்நாட்டுச் சட்டரீதியான செயற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளன என்று இராஜதந்திர வழிமுறைகளின் ஊடாக மற்றைய அரசுக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும். இறுதி அறிவித்தல் கிடைக்கும் திகதியின் பின்னர் எழும் முப்பதாம் நாளில் இவ் ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும்.

2. இவ்வொப்பந்தத்தின் ஏற்பாடுகள்,

(அ) மூலத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட வரிகளைப் பொறுத்தவரையில் இவ் ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் வருடத்தை அடுத்து வரும் பஞ்சாங்க வருடத்தின் சனவரி முதலாம் திகதி அல்லது அதன் பின்னர் எழும் வருமானம் தொடர்பிலும்;

(ஆ) ஏனைய வரிகளைப் பொறுத்தவரையில், இவ் ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் வருடத்தின் பின்னர் எழும் பஞ்சாங்க வருடத்தின் சனவரி மாதம் முதலாம் திகதி அல்லது அதன் பின்னர் எழும் ஏதேனும் வரி அறவிடக்கூடிய வருடத்திற்கான அறவிட முடியுமான வரிகள் தொடர்பிலும்;

ஏற்புடையதாகுதல் வேண்டும்.

உறுப்புரை 29

**முடிவுறுத்தல்**

இந்த ஒப்பந்தமானது, ஒப்பந்த அரசுகளில் ஒன்றினால் முடிவுறுத்தப்படும் வரை அமுலில் இருக்கும். ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் திகதியில் இருந்து ஐந்து வருட காலத்தின் பின்னர் எழும் எந்தவொரு பஞ்சாங்க வருடமும் முடிவடைவதற்கு ஆகக் குறைந்தது ஆறு மாதங்களுக்கு முன்னர் ஒப்பந்த அரசுகளில் ஒன்று இராசதந்திர வழிமுறைகளின் ஊடாக முடிவுறுத்துவது தொடர்பாக அறிவித்தல் ஒன்றை வழங்குவதன் மூலம் இந்த ஒப்பந்தத்தை முடிவுறுத்த முடியும். அத்தகைய சந்தர்ப்பத்தில்,

(அ) மூலத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட வரிகளைப் பொறுத்தவரையில் இச்சமவாயத்தை முடிவுறுத்துவது தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்ட வருடத்தை அடுத்து வரும் பஞ்சாங்க வருடத்தின் சனவரி முதலாம் திகதி அல்லது அதன் பின்னர் எழும் வருமானம் தொடர்பிலும் ;

(ஆ) ஏனைய வரிகளைப் பொறுத்தவரையில், அவ் அறிவித்தல் வெளியிடப்படும் வருடத்தின் பின்னர் எழும் பஞ்சாங்க வருடத்தின் சனவரி மாதம் முதலாம் திகதி அல்லது அதன் பின்னர் எழும் ஏதேனும் வரி அறவிடக்கூடிய வருடத்திற்கான வரிகள் தொடர்பிலும்;

இவ்வுடன்படிக்கையின் தொழிற்பாடு முடிவுறுத்தப்படும்.

இதற்கு சாட்சியாக உரியவாறு அதிகாரம் வழங்கப்பெற்ற அதிகாரிகள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

ஒரே சமமான அதிகாரங்களைக் கொண்ட ரஷ்ய, சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இணைப் பிரதிகளுடன் 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. பொருட்கோடலின் போது முரண்பாடுகள் காணப்படுமிடத்து ஆங்கில உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒப்பம்/உதயங்க வீரதுங்க,
இலங்கைக்கான ரஷ்ய தூதுவர்,
இலங்கைச் சனநாயக சோசலிசக்
குடியரசின் அரசாங்கத்தின் சார்பில்.

ஒப்பம்/விலடிமீர் என் பொளுயாத்
வரிகள் மற்றும் தீர்வைகள் அமைச்சர்.
பெலாருஸ் குடியரசின்
அரசாங்கத்தின் சார்பில்

12- 355

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.